**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-11012026-11259

Volume: 11

Issue: 1

Month: July

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 28.04.2026

Accepted: 25.05.2026

Published: 01.07.2026

Citation:
Bharani, S. (2026). The Social Misery Conveyed by the Poem "Irupuraka Karukkulla Pattayam" (The Double-Edged Sword). *Shanlax International Journal of Tamil Research, 11*(1), 90–96.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i1.11259

*Corresponding Author:
bharani_tam@avinuty.ac.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Social Misery Conveyed by the Poem "Irupuraka Karukkulla Pattayam" (The Double-Edged Sword)

**S. Bharani**
*Assistant Professor, Department of Tamil*
*Avinashilingam Institute for Home Science and Higher Education for Women*
*Coimbatore*
*https://orcid.org/0000-0002-7736-1205*

**Abstract**
*Today's poems bring forth the individual and societal problems prevailing among the people. They point to the sufferings faced by society within the context of everyday life - poverty, education, the struggle of unemployment, the failure to protect the elderly, crimes, and oppression, among other such issues.*
***Keywords:*** *Education, State of Research, Politics, Court of Law, Irupuraka Karukkulla Pattayam.*

**References**
1. A. Ganesan, Irupuraka Karukkulla Pattayam (The Double-Edged Sword), Abhimanyu Publication, August 2017, Ramanathapuram.
2. Abdul Rahman, Oru Vaanam Iru Sirahu (One Sky, Two Wings), p.21, Kavitha Veliyeedu, Chennai.
3. Abdul Rahman, Suttuviral (Pointing Finger), p.54, Kavitha Veliyeedu, Chennai.
4. Abdul Rahman, Oosigal (Needles), p.13, Kavitha Veliyeedu, Chennai.
5. Thirukkural: 391.
6. Puduvaikkumari, Tamil Nenjam (Tamil Heart), p.34, June 2017.
7. Sa. Christhu Gnana Valluvan, Vembar, Tamil Nenjam (Tamil Heart), 25 June 2017.

# இருபுறக் கருக்குள்ள பட்டயம் கவிதை உணர்த்தும் சமுக அவலம்

***சு. பரணி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர்

***ஆய்வுச்சுருக்கம்***
*தனிநபர் சமுதாயப் பிரச்சினைகளை இன்றையக் கவிதைகள் எடுத்துரைக்கின்றன. கவிஞர் அ. கணேசன் எழுதியுள்ள இருபுறம் கருக்குள்ள பட்டயம் கவிதைத் தொகுப்பு சித்தரிக்கின்ற துன்பங்கள், வறுமை, கல்வி, வேலையில்லாத் திண்டாட்டம் முதியோர்களைப் பாதுகாக்க தவறுதல், குற்றச்செயல்கள் ஒடுக்குமுறை போன்ற பிரச்சினைகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.*
***திறவுச் சொற்கள்:*** *கல்வி, ஆய்வின் நிலை, அரசியல், நீதிமன்றம், இருபுறக் கருக்குள்ள பட்டயம், அ. கணேசன், கவிதை, திறனாய்வு.*

கல்வி என்பது குழந்தைகளின் உடல், மன வளர்ச்சிக்கு முக்கியமானது. குழந்தையின் அறிவு சார்ந்த வளர்ச்சிக்குக் கல்வி முக்கியம். அதனால் தான் “கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே” என புறநானூறு எடுத்து உரைக்கிறது. கற்க வேண்டிய நூல்களை முறையாக பிழையறக் கற்று அதன் வழியில் நின்று மனிதன் வாழ வேண்டும் என்பதனை திருவள்ளுவர்,

***கற்க கசடறக் கற்க கற்றபின்***
***நிற்க அதற்குத் தக (திருக்குறள்:391)***

என்கிறார். அதற்குக் கல்வி, மாணவர்களுக்குப் புரிகின்ற விதத்தில் அவர்களின் அறிவினை விருத்தி செய்யும் விதத்தில் அமைய வேண்டும். ஆனால், இன்றையக் கல்வி நிலையங்கள் அவ்வாறு இல்லாமல், மாணவர்களின் அன்னையருக்கும் தந்தையருக்கும் அல்லவா வீட்டுப் பாடங்களையும் ஆய்வுத்திட்டத்தினையும் கொடுக்கின்றன. மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பெற்றோர் கற்கும் வயதில் கற்கா விட்டாலும் தங்களின் மகன் அல்லது மகளுக்காக அனைத்தையும் கற்றுக்கொள்ள வேண்டிய நிர்பந்தத்திற்குத் தள்ளப்படுகின்றனர் என்பதனை,

***நான் இப்போதெல்லாம் நன்றாய்***
***ஓவியம் தீட்டுகிறேன்***
***ஆங்கிலச் சொற்களை***
***பிழையின்றி உச்சரிக்கின்றேன்***
***இனிமையாய் பாடுகின்றேன்***
***அழகாய் ஆடுகின்றேன்***
***திட்ட கட்டுரைகள் படிக்கின்றேன்***
***இதெல்லாம்***
***நான் பள்ளியில்***
***படிக்கும் காலத்தில் கற்கவில்லை***
***....***
***என் மகனை***
***அரசு பள்ளியில் அல்ல மெட்ரிகுலேஷன்***
***பள்ளியில் அல்லவா சேர்த்திருக்கிறேன்.***
***(இருபுறக் கருக்குள்ள பட்டயம் ப.131)***

என்று பதின்மப் பள்ளியின் நிலைமையை எடுத்துக்காட்டி, அரசு பள்ளிகளின் நிலையையும் வினா எழுப்பியுள்ளார்.

### ஆய்வுப் போக்கு

ஆய்வு செய்தல் என்பது, மனிதன் தன்னுடைய அறிவுத்தேடலை விருத்தி செய்வதாகும். இவ்வாய்வு சமுதாயத்திற்கும் மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும். ஆனால், இன்றை ஆய்வுகள் அவ்வாறு இல்லை. ஆய்வு என்பது பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் முதன்மை ஆதாரம், துணைமை ஆதாரத்தை எளிமையாகக் கூறியுள்ளார். இதனை,

**சாம்பார் பாத்திரத்திற்குள்ளே**
**முதன்மை ஆதாரம்**
**பாத்திரத்திற்கு வெளி இருப்பதெல்லாம்**
**துணைமை ஆதாரம்** *(ப.51)*

என ஆதாரத்திற்கு விளக்கம் தருகிறார். மேலும் அன்றைய ஆய்வுகள் எல்லாம் அறிவுத் தேடலை முதன்மை ஆக்கி அதில் சிக்கலைக் கண்டறிந்து அச்சிக்கலைக் விடுவித்து அரியதொரு முத்துப்போன்ற ஆய்வினை செய்து, தமிழ் கூறும் நல்லுலகிற்குப் படைத்தளித்தது. ஆனால், இன்றைய சூழலில் ஆய்வு என்பதுமாணவர்களிடம் தேடல் என்பது எட்டாக்கனியாகவும் உள்ளங்கை நெல்லிக்கனி போல இருக்கும் பழைய ஆய்வேடுகளை கொண்டு புதியதொரு ஆய்வேட்டினைச் உருவாக்குகின்றனர்.

**அன்று**
**தேடல்**
**முயற்சி**
**பயிற்சி**
**வாசித்தல்**
**தொகுத்தல்**
**ஆறுதல் ஆய்வேடு ஆனது**
Today
Copy
cut
paste
print
Theseis *(ப.32)*

ஆனது என்று இன்றைய ஆய்வு உலகின் நிலையையும் மாணவர்களின் அறிவின்மையை அங்கதத்தின் வழி பாடுபொருள் ஆக்கியுள்ளார் ஆசிரியர்.

### தேர்தல் அவலம்

நம்மை ஆளும் தலைவர்களை நாமே தேர்ந்தெடுக்கும் ஒரு உன்னத முறை தான் தேர்தல். அரசியல் என்பது மனித வாழ்க்கையிலிருந்து பிரிக்க இயலாத ஒன்றாகும். இது சமுதாய வாழ்க்கைக்கு அமைதியைத் தேடித் தரும் ஒரு அமைப்பு ஆகும். அதிலும் அரசியல் தலைவர்கள் மக்களுக்குப் பணம் கொடுத்து மக்களை ஒட்டு வங்கிகளாக மட்டுமே பார்க்கின்றனர் என்பதனை,

**வரிசையில்**
**செல்லும்**
**வாக்காளர்கள்**
**ஓட்டுச்சாவடிக்கு அல்ல**
**ஓட்டுக்கு பணம் வாங்க**
**கட்சி அலுவலகத்தை நோக்கியபடி**

**ப.51**

என இன்று நிலவும் தேர்தல் அவலங்களைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

### அரசியலில் கட்சித் தாவல்

அரசியல் என்பது, அலுவலகம், கல்வி மற்றும் சமய நிறுவனங்கள் உட்பட அனைத்திலும் காணப்படுகின்றது. ஒரு சமுதாயம் நிலைபெறுவது அதன் அரசையும், அரசாங்கத்தையும் பொறுத்திருப்பதால் அரசியலே முதன்மையான அறிவுப் பகுதி என்கிறார் அரிஸ்டாட்டில். (கலைக்களஞ்சியம் (தொகுதி-1ப.155) அரசியலுக்கென்று சில உரிமைகள் இருக்கின்றன. ஆனால் அதைப் பயன்படுத்த முடியாத நிலையும், மக்களின் அறியாமையும்தான் நிறைந்து கிடக்கின்றன. “அரசியல் உரிமைகள் பலவகைப்படும் அவை வாக்களிக்கும் உரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை, நிர்வாகம் செய்யும் உரிமை, புகார் மனுத்தாக்கல் செய்யும் உரிமை. அரசை விமர்சிக்கும் உரிமை என்பன குறிப்பிடத்தக்கனவாகும் (சிவகாமி பரமசிவம், மனிதஉரிமைகள், ப.63) இவ்வளவு உரிமைகள் இன்றைய அரசியல் தலைவர்களில் சிலர் அனைத்து கட்சிகளிலும் உறவுடன்

இருப்பார்; எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவரின் வாழ்க்கையில் தாழ்வு என்பது எள்ளளவும் இல்லை என்பதனையும் கொள்கைப் பிடிப்பு இல்லாத அரசியல் தலைவர்களின் அரிய செயல்களையும் கடிகிறார். இதனை,

**காலை உணவை**
**அவர் கட்சியிலும்**
**மதிய உணவை**
**எதிர்க்கட்சிகளும்**
**இரவு உணவை**
**ஆளும் கட்சியிலும் உண்பதே**
**அரசியல் நாகரீகம் போலும் ப.32**

என்ற அரசியலின் நிலையை எடுத்துக்காட்டு கின்றார். மீராவின் "ஊசிகள்" பணத்துக்காக, பதவிகளுக்காகக் கட்சிவிட்டுக் கட்சி மாறும் அரசியல்வாதிகளை எடுத்துக்காட்டுகிறார். இவர்களால் பொதுவாழ்க்கை தரம் தாழ்ந்து போனது. இதைக் குத்திக் காட்டும் "வேகம்" - ஒரு தரமான எள்ளல் கவிதை பின்வருமாறு:

**எங்கள் ஊர் எம்.எல்.ஏ**
**ஏழு மாதத்தில்**
**எட்டுத் தடவை**
**கட்சி மாறினார்**
**மின்னல் வேகம்**
**என்ன வேகம்?**
**இன்னும் எழுபது**
**கட்சி இருந்தால்**
**இன்னும் வேகம்**
**காட்டி இருப்பார்.....**
**என்ன தேசம்**
**இந்தத் தேசம்? (ஊசிகள், 13)**

என்ற கவிதை கட்சி மாறுவதில் காட்டிய வேகத்தைத் தன்னைத் தேர்ந்து எடுத்த மக்களுக்குத் தொண்டு செய்வதில் காட்டவில்லை என்று குறிப்பாக இகழ்கிறது. இன்னும் பல கட்சிகளுக்குத் தாவி இருப்பார். அவரது "வேகத்துக்கு" ஈடு கொடுக்க இங்குக் கட்சிகள்தாம் போதவில்லையாம்! என கிண்டல் செய்வதனை அறியமுடிகிறது. அரசியல்வாதிகள் சுயநலத்தால் இருகட்சிகளிலும் தாவி வாழ்கின்ற நிலையை எடுத்துக்காட்டுகின்றது.

**அரசு அதிகாரிகள்**

அரசுஅதிகாரிகள் நேரம் தவறி வேலைக்கு வரும் தன்மையையும் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்திருந்தால் நேரத்திற்குக் கடமையை செய்வான் என்று வருந்தும் வெகுஜன மக்களின் புலம்பலையும் எடுத்துரைக்கின்றார் ஆசிரியர்.

**சுதந்திரம்**
**கிடைப்பதற்குப் பதிலா**
**நாட்டை ஆண்டு இருந்தா**
**இவனுங்க**
**11.30 மணிக்கு**
**வருவார்களா**
**தாலுகா ஆபீசில் (ப.50)**

என அதிகாரிகளின் நேரம் தவறும் செயலைப் பதிவு செய்கிறார்

**வேலைத் தேடல்**

அறிவால் தன்னை உயர்த்தி, வாழ்க்கையில் தான் உயரவும் தன்னால் தன் குடும்பம் உயரவும் இளைஞர்கள் வேலைத் தேடலை மேற்கொள்கின்றனர். ஆனால், படிப்பிற்கேற்ற வேலை கிடைத்த பாடில்லை. என்னுடை வேலைத் தேடும் தோரணை குறைந்து, கீழே கிடந்தேன். பிச்சைக்காரன் என நினைத்து மக்கள் போட்ட பிச்சையால் இன்று நான் பணக்காரன் ஆகியிருக்கிறேன் என்று விரக்தியில் கவிதை புனைந்துள்ளார்.

**பணக்காரனாக**
**பணி தேடி**
**அலைந்தேன்**
**படிக்கட்டுகள்**
**ஏறி இறங்கினேன்**
**அதற்காக**
**சிகை அலங்காரம்**
**செய்தேன்**
**உடை அலங்காரம்**
**செய்தேன்**
**மெய் அலங்காரம்**
**செய்தேன்**
**பணி கிடைக்கவில்லை**
**நாட்கள் கழிந்தன**

**அகத்திலே சோர்வு**
**நீளமான தலைமுடி**
**நீளமான தாடி**
**கிழிந்து போன சட்டை**
**அருவருப்பான தோற்றம்**
**சாலையில் கிடந்தேன்**
**பணக்காரன் ஆகிவிட்டேன் புன்னகையோடு**
**(பிச்சைக்காரன் ப.47)**

அரசுத் தேர்வு எழுதி வேலைக்குச் செல்ல ஆசை தான், ஆனால் அது சிந்துபாத் கதைப்போல தொடர்கதையாகிறது என்ற மன வேதனையையும் பதிவு செய்துள்ளார்

**அடுத்த பிறவி**
**ஒன்று இருந்தால்**
**எனக்கு மனித பிறப்பு**
**வேண்டாம்! நான்**
**பாடசாலையில்**
**எழுதிய தேர்வை விட**
**அரசு பணிக்காக**
**போட்டித் தேர்வு எழுதியது தான்**
**அதிகம். ப.38**

என போட்டித் தேர்வை எழுதி வெற்றி பெறுவது என்பது குதிரைக் கொம்பென அருகி வருவதனையும் அதனால் இளைஞர்கள் படும் மன வேதனையையும் கவிதையாக்கியுள்ளதனை அறியலாம்

## நீதிமன்றங்கள்

நீதிமன்றங்களின் நிதர்சனத்தை முன் வைத்தும் சில கவிதைகள் புனைந்துள்ளார் குற்றங்கள் எண்ணிக்கையில் குறைந்த அளவு வாய்தாக்களால் விசாரிப்புகள் தான் அதிகம் என்பதை

**இன்று நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும்**
**குற்றங்களின் எண்ணிக்கை குறைவு**
**விசாரிக்கப்படும் எண்ணிக்கையே அதிகம்**
**இன்று குற்றங்கள் மாறவில்லை**
**தீர்ப்புக்கள் மாறுகின்றன ப.24**

எனக் குற்றம் செய்தவன் பொய்சாட்சியால் விடுதலை பெறுவதையும் குற்றத்தை ஒப்புக் கொண்டவன் தண்டனைப் பெறுவதையும் சுட்டிக்காட்டியுள்ளார்

**குற்றத்தை**
**மறைத்த அவனுக்கு**
**விடுதலை தான் நீதி**
**குற்றத்தை**
**ஒப்புக்கொண்ட அவனுக்கு**
**தண்டனை தான் நீதி ப.22**

என்று நீதியின் நிலையையும் அங்கதமாக எடுத்துரைத்துள்ளார்

## பெற்றோரைப் பேணாமை

தன்னைப் பெற்று வளர்த்து பெரிய பதவிகளில் அமர வைத்து அழகு பார்க்கும் பெற்றோர்களைப் பிள்ளைகள் மதிப்பதில்லை: பாதுகாப்பதும் இல்லை. அவர்களை வயோதிக பருவத்தில் திண்ணையிலும் முதியோர் இல்லங்களிலும் விட்டுவிடுகின்றனர். ஆனால், தன்னை வெளியில் மனிதநேயம் மிக்கவன் எனப் பறைசாற்றும் பொருட்டு பல சேவை செய்வதனைத் தன் வாடிக்கை ஆக்குகின்றனர்.

**யாருக்கு**
**உதவலாம் என**
**யோசிக்கும் நீ**
**உன் வீட்டின்**
**ஜன்னலை திறந்து பார் திண்ணையிலே**
**உன் பெற்றோர் ப.104**
**இந்த வீட்டில்**
**திண்ணைகளில் காணேமே**
**ஏன்**
**இங்கு**
**முதியவர்கள் இல்லையா இருக்கிறார்கள்**
**அப்படியானால்**
**இங்கே திண்ணை**
**இருக்கவேண்டும் அல்லவா**
**அதற்கு தேவையில்லை ஏன்**
**இப்போது தான்**
**முதியோர் இல்லம்**
**இருக்கிறதே (ப.118)**

படித்து பட்டம் பெற்றவர் தங்கள் நாட்டை மறந்து வெளிநாடுகளில் தஞ்சம்

அடைகின்றனர். தன்னைத் துன்புறுத்தி பிள்ளைகளை வாழ்வில் உயர்த்திய தந்தைக்கு வாழ்வின் இறுதி நாட்களில் மட்டுமல்ல இறுதி சடங்குகளில்கூட மகன் வராமல் இருக்கிறான் என்ற நடப்பியல் நிலையை எடுத்துரைக்கிறார்.

***பாடுகள் பலபட்டு***
***பார்ட்டிகள் பல கருத்துக்கள்***
***பல நாட்டு***
***பட்டம் படிக்க வைத்த***
***பாட்டாளி***
***இறுதியில்***
***பாடையை தூக்கக் கூட***
***பாலகன்***
***வருவதில்லை (ப.18)***

என்ற கவிதை வரிகள், தான் பாடிக்கா விட்டாலும் தன் மகன் படித்து வெளிநாட்டிற்குச் சென்று, அவன் தலைமுறை மாற வேண்டும் என நினைக்கும் பெற்றோர்களின் தியாகத்தினை மறந்து, அவர்களின் இறப்பிற்குக்கூட வருவதற்கு மனமில்லாத மகன்களும் உண்டு என்பதனை எடுத்துரைக்கிறார். இன்றைய தலைமுறையினருக்குத் தாலாட்டு பாடவும் தெரியாது: பாடத் தெரிந்தவர்களையும் வீட்டில் வைத்துக்கொள்ளவும் மனமில்லாமல் முதியோர் காப்பகத்தில் விடும் அவலத்தை பின்வரும் கவிதை வரிகள் எடுத்துரைக்கின்றன.

***தாலாட்டு***
***கேட்க முடியவில்லை***
***முதியோர் காப்பகம்***
***(தமிழ் நெஞ்சம், ப. 34)***

## இளைஞர்கள் செயல்

இளைஞர்கள்; கடலைப் போன்று அமைதியானவர். ஆனால் பிரச்சினைப் புயலடித்தால் சுனாமியாகவும் சீறிப் பாயும் ஆற்றல் மிக்க காளைகளாகவும் திகழ்வார்கள். இவர்கள் இருபுறம் கருக்குள்ள பட்டயம் போன்றவர்கள்; இவர்கள் வெறும் வார்த்தைகளால் வாழ்பவர்கள் அல்ல. அவர்களின் மனதின் எண்ணங்களையும், யோசனைகளையும் கூட ஊடுருவி மாற்றத்தை உண்டாக்கக் கூடியவர்கள். இருபுறம் கருக்குள்ள பட்டயம் என்பது தேவனுடைய வார்த்தையின் சக்திவாய்ந்த மற்றும் ஊடுருவும் தன்மையைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சக்திவாய்ந்த உருவகமாக பைபிளில் (எபிரேயர் 4:12) பயன்படுத்தப்பட்ட வாசகம் இன்றைய இளைஞர்களுக்கும் பொருந்தும்வகையில் அமைந்துள்ளது.

ஜல்லிக்கட்டு என்பது கலாச்சாரம், அதனை நிறுத்தக்கூடாது எனக் கூறி இளைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடினால் சட்டசபைக் கூடி இளைஞர்களின் எழுச்சியைத் தணித்தது. அவர்களின் நித்திரையும் விழிப்பும் இருபுறம் கருக்குள்ள பட்டயம் போன்று எப்போதும் கூர்மையானது. அதனால் எப்படி தாக்கினாலும் பாதிப்பு உண்டு எனக் கூறி கூட்டத்தினை எடுத்துரைக்கிறார்.

***எழுந்த சுனாமி அலைகளின்***
***விழித்தெழு தமிழகம்***
***கூடியது சட்டசபை தணிந்தது எழுச்சி***
***பாய்ந்த காளைகள்***
***நிலைத்தது கலாச்சாரம்***
***அரசியல் அலைகளை ஞாபகம் இருக்கட்டும்***
***எங்கள் உறக்கமும் விழிப்பும்***
***இருபுறம் கருக்குள்ள பட்டயம் (ப.25)***

என்று இளைஞர்களின் ஒன்றிணைந்த சக்தியை பதிவு செய்கின்றார்.

## தொகுப்புரை

- தனியார் பள்ளியில் தனது மகனையோ மகளையோ சேர்த்துப் படிக்க வைத்த பெற்றேர்கள் இன்று அதிக திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டிய சூழல் உள்ளதை ஆசிரியர் பதிவு செய்கின்றார்.
- இன்றை ஆய்வுலகில் மாணவர்களின் ஆர்வம் குறைந்து வருகின்ற நிலையை வருத்தத்துடன் படம் பிடித்துக் கட்டுகின்றார்

- ஈக்களைப் போன்று அரசியல் தலைவர்கள் கட்சி விட்டுக் கட்சி தாவுகின்றனர். அவர்களின் வேகத்திற்கு ஈடுகொடுக்க பாவம் கட்சிகள் தான் இல்லை என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.
- இருகருக்குள்ள பட்டயம் போன்று இன்றைய இளைஞர்கள் கூர்மையானவர்கள். எந்தப் புறம் தாக்கினால் பாதிப்பு உண்டு என இளைஞர்களின் தன்மையை எடுத்துரைக்கிறார்.

## துணைநூற் பட்டியல்

1. அ.கணேசன், இருபுறக் கருக்குள்ள பட்டயம், அபிமன்யு, வெளியீடு, இராமநாதபுரம், ஆகஸ்டு 2017.
2. அப்துல் ரகுமான், ஒரு வானம் இரு சிறகு, கவிதா வெளியீடு, சென்னை.
3. மீரா, சுட்டுவிரல், ப.54 கவிதா வெளியீடு, சென்னை.
4. அப்துல் ரகுமான், ஊசிகள், ப.13 கவிதா வெளியீடு, சென்னை.
5. திருக்குறள்: 391
6. புதுவைக்குமாரி, தமிழ் நெஞ்சம், ப. 34 ஜூன் 2017
7. சா.கிறிஸ்து ஞான வள்ளுவன் வேம்பார் தமிழ் நெஞ்சம் 25 ஜூன் 2017